பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 27 | சனிக்கிழமை | 31.05.2025 | அதிர்வு 300

## பிரதமர் பதவியிலும் அமைச்சரவையிலும் மாற்றம் ஏற்படாது!



### அமைச்சர் சுனில் உறுதி

“தேசிய மக்கள் சக்திக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடு தீவிரமடைந்துள்ளது என்றும், அதனால் வெகுவிரைவில் பிரதமர் 06



### தமிழரசு - முன்னணித் தலைவர்கள் சந்திப்பு:

# இணக்கப்பாடு எதுவுமே வரவில்லை ஆனால் இணங்கிச் செயற்படுவோம்

### பேச்சுகளின் பின் சுமந்திரன் உறுதிபடத் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கிலே இருக்கும் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இரு தலைவர்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு தலைவர்களுக்கும் இடையில் நேற்று மாலை இரண்டு மணிநேரம் நடைபெற்ற பேச்சுகளில் கொள்கை ரீதியான இணக்கப்பாடு எதுவும் உடன்பாடாக எட்டப்படவில்லை. ஆனால், இந்த விடயத்தில் இரு தரப்புகளும் இணங்கிச் செயற்படுவோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உறுதிபடத் தெரிவித்தார். 06

# தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மீறும் வகையில் எவரும் செயற்படவே முடியாது!

### தமிழரசுடனான சந்திப்பின் பின் கஜேந்திரகுமார் இப்படிக் கருத்து

(ந.லோகதயாளன்)

“கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்துக்கே மக்கள் ஆணை வழங்கினார்கள். தமிழ்த் தேசியப் பேரவையான நாம், இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளும் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தியே மக்களிடம் ஆணை கேட்டனர். இந்த ஆணையை மீறும் வகையில் எவரும் செயற்பட முடியாது.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 07




‘தொட்டால் பூ மலரும்’ என்ற சினிமாப் படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலுக்கும் என்னத்தே கன்னையாவுக்கும் இடையில் நடைபெறும் “வரும்... ஆனா வராது...!’ டயலாக் பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

அதுபோல, நேற்று மாலை இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர், செயலாளருக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் தலைவர், செயலாளருக்கும் இடையில் கொக்குவில் ‘ஃபொக்ஸ் ஹொட்டேலில்’ நடைபெற்ற சந்திப்பில் இணக்கப்பாடு வந்ததா என்று கேட்டால், ‘வந்தது... ஆனால் வரவில்லை...!’ என்றுதான் பதில் கூற வேண்டிய மாதிரி இருக்கின்றது.

“இணக்கப்பாடு வரவில்லை. ஆனால் இணங்கிச் செயல்படக்கூடிய உறுதிப்பாடு நமது பேச்சுகளில் வெளிப்பட்டன” என்ற சாரப்பட நம்பிக்கை தெரிவித்து இருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன்.

ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் 06



# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பைத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

காலி, கேகாலை, மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தபால் அதிகாரிகளின் புறக்கணிப்பு நிறைவு; தீர்வு இல்லையேல் மீண்டும் போராட்டம்




10 அம்ச கோரிக்கைகளை முன்னிறுத்தி அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்த 48 மணிநேர அடையாள பணிப் புறக்கணிப்பு நேற்று நள்ளிரவுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

நேற்று கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேர்ரி நள்ளிரவுடன் பணிப்புறக் கணிப்பு முடிவுக்கு வந்தாலும் தமக்கான உரியத் தீர்வு வழங்கப்படாத பட்சத்தில் மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தபால்மற்றும்தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்துள்ள அடையாள பணிப்புறக்கணிப்பு காரணமாக சுமார் 70 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக சில தொழிற் சங்கங்கள் முன்வைக்கும் கருத்து உண்மைக்குப் புறம்பானது என தபால் மா அதிபர் பி.சத்குமார தெரிவித்துள்ளார்.




# மட்டக்களப்பில் பிள்ளையானின் கட்சி காரியாலயத்தை தோண்டி, நோண்டி நுங்கெடுக்கும் சி.ஐ.டி. விசேட குழு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக் காரியாலயத்தை கொழும்பில் இருந்து வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் விசேட அதிரடிப்படையின் நேற்று வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியில் இருந்து சுற்றி வளைத்து, முற்றுகையிட்டு, கட்டட நிலத்தைத் தோண்டி பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தமையால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நேற்று முன்னிரவும் தேடுதல் தொடர்ந்தது.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006 டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் பிரயாணித்த நிலையில் அவர் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் போயிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தனை கடந்த ஏப்பிரல் 8 ஆம் திகதி கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். அவர் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 3 மாதத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மட்டக்களப்பு முதலாவது வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக் காரியாலயத்தை கொழும்பில் இருந்து வந்த விசேட அதிரடிப்படையினர் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர. நேற்றுப் பகல் 11.00 மணிக்கு முற்றுகையிட்டனர். அங்கிருந்தவர்களை அழைத்து அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளை வாங்கிக் கொண்டு ஓர் இடத்தில் இருக்க வைத்தனர்.

இதனை தொடர்ந்து காரியாலயத்தில் இருந்து யாரும் வெளியேறவே உட்செல்லவோ விடாது கட்டடத்தைப் பூட்ட, உள்ளே நிலத்தைத் தோண்டி பலத்த சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் தேடுதலின் போது பிஸ்டல் மற்றும் ஷொட் கன் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படும் சில ரவைகள் மீட்கப்பட்டன என முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.













# அபுதாபி எண்ணெய் கூட்டுத்தாபன பிரதிநிதிகளுடன் வலுசக்தி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் சந்திப்பு

அபுதாபி தேசிய எண்ணெய் கூட்டுத்தாபன பிரதிநிதிகள் மற்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி , தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இருநாடுகளுக்கு இடையிலான கனிய எண்ணெய் தொழில்துறை தொடர்பிலான விநியோக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை அறிந்துகொண்டு எதிர்கால திட்டங்களை செயல்படுத்துவதற்கு அமைவான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கு அவசியமான கச்சா எண்ணெயினை நீண்ட காலத்திற்கு நியாயமான விலையில் வழங்குவது தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையில் விரைவான ஒப்பந்தமொன்றை கைசாத்திடுவதுடன், இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு பணிகளின் மேம்பாடு மற்றும் அதன் மூலம் வலய மட்டத்தில் கனிய எண்ணெய் சுத்திகரிப்பு சந்தைக்குள் குறிப்பிடத்தக்க பகுதியை அடைந்து கொள்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி மற்றும் அபுதாபி தேசிய எண்ணெய் கூட்டுத்தாபன Crude and Condensate இன் சிரேஷ்ட உப தலைவர் அப்துல்லா அல் குபாயிசி உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரிகள் குழுவும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.










# நல்ல நாடாக இலங்கையை சர்வதேசத்தில் உயர்த்தும் பொறுப்பை உயிரை துச்சமாக கருதி செய்து முடிப்பேன்

## ஜனாதிபதி அநுர உறுதி

அரசியல் அனுசரணையால் உருவாகியிருந்த குற்றங்கள் நிறைந்த நாட்டுக்கு பதிலாக, நல்லதொரு நாடாக இலங்கையை சர்வதேசத்தில் உயர்த்தி வைப்பதற்காக தனக்கு வழங்கப்பட்டிருக்கும் கைவிட முடியாத பொறுப்பை உயிரை துச்சமாக கருதி செய்து முடிப்போம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

இலங்கை இயற்கை வளங்களினால் நிறைந்த தன்னிறைவான நாடாக இருந்த போதிலும் முன்னைய ஆட்சியாளர்களின் திட்டமிடாத செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்கு அபிவிருத்தி கிட்டாமல் போயுள்ளது என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தற்போதைய அரசாங்கம் படிப்படியாக நிலையானதாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

கல்கிரியாகம, பஹமினியாகம சிறி சமாதி விகாரையின் தாது வளாகம் மற்றும் சிலை திறப்பு நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

வண. காகம சிறிநந்த தேரரின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி தாது வளாகத்தை திறந்து வைத்ததன் பின்னர் அதற்கு முதலாவதாக மலர் துவி வழிபட்டார்.


அதனை தொடர்ந்து நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தான் ஒருபோதும் பதவிகளையும், பட்டங்களையும் எதிர்பார்த்து செயலாற்றவில்லை என்றும், மக்களின் துயரங்களை உண்மையாகவே கண்ட மற்றும் அனுபவித்த தலைவர் என்ற வகையில் அனைத்து மக்களுக்காகவும் சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

சட்டத்தின் ஆட்சி உறுதி செய்யப்பட்ட மற்றும் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக காணப்படும் நாட்டை தற்போதும் அரசாங்கம் கட்டியெழுப்பியுள்ளதெனவும், எதிர் கால சந்ததியினரை போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து முற்றாக விடுக்கும் பொறுப்பை உறுதியாக நிறைவேற்றி, சட்டவிரோத போதைப்பொருள் வியாபாரம் மற்றும் அதனுடன் இணைந்த குற்ற வலையமைப்புக்களை உடைப்பதற்கான நிறுவனக் கட்டமைப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

அனைவரும் எதிர்பார்க்கும் அபிவிருத்தியடைந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான நலமிக்க சமூகம் மற்றும் கருணையுள்ளம் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் இந்நாட்டு மகா சங்கத்தினருக்கு முதன்மை பொறுப்பு உள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக வண. காகம சிறிநந்த தேரர் முன்னெடுக்கும் சமூக மற்றும் சாசன பணிகளை பாராட்டினார்.

அநுராதபுரம் அடமஸ்தானாதிபதி, நுவர கலாவிய பிரதான சங்க நாயக்கர் வண. பல்லேகம ஹேமரதன தேரர், சியம் மகா நிக்காயவின் மல்வத்து பீட மாத்தளை மாவட்ட பிரதான சங்க நாயக்கர் மஹலகொடுவே விமலதம்ம தேரர் தலைமையிலான மூன்று மகா பீடங்களினதும் மகா சங்கத்தினரும், வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் திலின சமரகோன் உள்ளிட்டவர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொன்னம்பலம் எம்.பி. இந்த சந்திப்பின் பின்னர் கொக்குவிலில் தமது கட்சி அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் அத்தகைய இணக்கம் இருப்பதான நம்பிக்கையைத் தருவதாக அமையவில்லை.

தங்களுக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும் (சங்குச் சின்னத் தரப்புக்கும்) இணக்கம் வரக்கூடிய இடங்களில் தமிழரசின் காலை சைக்கிள் கட்சி வாரிவிடும் என்றே தோன்றுகின்றது. நேற்றைய சந்திப்பின் பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்துக்கள் அத்தகைய மயக்கமான தீர்மானங்களைத்தான் மக்கள் மனதில் ஏற்படுத்துவனவாக இருக்கின்றன.

இரு கட்சியினரும் நேற்று சந்தித்த இடம் மிகப் பொருத்தமானது. அந்த விடுதிக்கு பெயர் ஃபோக்ஸ் ஹொட்டல். நரி விடுதி.

இரண்டு தரப்புகளுமே நரித் தந்திரத்துடன்தான் இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுகின்றார்கள் என்ற கருத்து – நிலைப்பாடு – சுயாதீன அவதானிகளுக்கு உண்டு. அதனால்தான் இந்த ஹொட்டலைச் சந்திப்புக்கு தேர்ந்தெடுத்தார்களோ என்னவோ....!

சந்திப்பின் முடிவில் இடம் பெற்ற ஒரு விவகாரம் குறித்து கொசுறு தகவல் ஒன்று உண்டு.

சந்திப்பு முடிந்து புறப்படும் போது தமிழரசு கட்சியின் செயலாளர் சுமந்திரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனிடம் ஒரு கேள்வி கேட்டார்.

“உங்கள் கட்சித் தலைவர் வரும் மாகாண சபை தேர்தலில் ஒரு தும்புத்தடியை முதலமைச்சராக நிறுத்தப் போவதாக கூறியிருந்தார். அந்த தும்புத்தடி நீங்கள்தானா?” – என்று அவரிடம் கேட்டார் சுமந்திரன்.

அவரிடம் (தலைவரிடம்) கேட்டுச் சொல்கிறேன் என்று முறைப்புடன் பதில் அளித்து விட்டு புறப்பட்டார் கஜேந்திரன்.

தப்பித்தவறி மாகாண சபைத் தேர்தல் விரைந்து நடத்தப்பட்டால், அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுவருக்குத் தயாராக ‘தும்புதடி’ பட்டம் நேரதுடனேயே சூட்டப்பட்டு காத்திருக்கின்றது என்பதுதான் நிலைமை. இந்த நாமத்தை கொடுத்து, அந்தப் பட்டத்தை சூட்டியவர் அவர்கள் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்பதுதான் இதில் சிறப்பம்சம்.

*　　*　　*

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை நிலைமையை ஆராய்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் இன்று சனிக்கிழமை திருகோணமலைக்குச் செல்வார் என்று ஓரிரு தினங்களுக்கு முன்னர் என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன். ஆனால் இன்று அவர் மட்டக்களப்பில் நிற்பார் எனத் தெரிகின்றது.

திங்கட்கிழமை அவர் கொழும்பில் ‘சாராய பார் லைசன்ஸ்’ விநியோகங்களுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் வழக்கில் வாதிட வேண்டி இருக்கின்றமையால், அதற்கிடையில் அவர் திருகோணமலைக்குச் செல்வாரா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் இன்னும் வெளியானதாகத் தெரியவில்லை. அது தாமதமாகின்ற காரணத்தினால் புதிய சபைகளைக் கூட்டுகின்ற கூட்டத்திற்கான காலமும் தாமதமாகிச் செல்கின்றது. ஆகையினால் கட்சி தலைவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு போவதில் அவசரம் காட்ட வேண்டிய தேவை இல்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

## பிரதமர் பதவியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பதவியிலும், அமைச்சரவையிலும் மாற்றம் ஏற்படவுள்ளது என்றும் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் கருத்து முற்றிலும் பொய்யானது. அரசியலில் வங்குரோத்து நிலையடைந்துள்ளவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு நாம் அவதானம் செலுத்தப் போவதில்லை.”

– இவ்வாறு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“உப்பு பிரச்சினை தற்போது முடிவடைந்துள்ள நிலையில் எதிர்க்கட்சியினர் தற்போது அமைச்சரவை மாற்றத்தைக் கையில் எடுத்துள்ளார்கள்.

தேசிய மக்கள் சக்திக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. பொதுவான இணக்கப்பாட்டுடன் செயற்படுகின்றோம்.

அமைச்சரவை மாற்றம் மற்றும் பிரதமர் பதவியில் மாற்றம் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுக் கொள்வது முற்றிலும் அடிப்படையற்றது.

அமைச்சரவையில் சகல உறுப்பினர்களும் கூட்டுப் பொறுப்புடன் செயற்படுகின்ற நிலையில் எவ்வித கருத்து முரண்பாடுகளும் ஏற்படவில்லை.

ஊழல், மோசடிக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவோம்.

கடந்த கால அரசுகள் ஊழல்வாதிகளைப் பாதுகாத்தது. எமக்கும் ஊழல்வாதிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

நீதிமன்றம் மற்றும் விசாரணை நிறுவனங்கள் சுயாதீனமான முறையில் செயற்படுகின்றன. நீதிமன்றம் மற்றும் விசாரணை நிறுவனங்களின் செயற்பாடுகளில் எமது அரசு தலையிடவில்லை.

ஆகவே,ஊழல்வாதிகள்கைதுசெய்யப்படுவதை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட வேண்டாம்.” – என்றார்.

## இணக்கப்பாடு எதுவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“வடக்கு, கிழக்கிலே இருக்கும் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியினரின் நிலைப்பாடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னியினரின் நிலைப்பாடும் ஏறத்தாழ ஒரே நிலைப்பாடாக இருக்கின்ற காரணத்தால் அந்த அடிப்படையிலேயே தான் சபைகள் அமைக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அல்லது அதனை உறுதியாகச் சொல்லலாம். இதை ஓர் இணக்கப்பாடாக அறிவிக்க அவர்கள் விரும்பவில்லை. ஆகையினாலே இணக்கப்பாடு இல்லை என்றே வைத்துக் கொள்ளலாம். ஆனால், இணங்கியிருக்கின்றோம்.” – என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

யாழ். தாவடியில் அமைந்துள்ள பொக்ஸ் விடுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்..

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கைத் தமிழசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் இன்று (நேற்று) மாலை 5.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை நீண்ட பேச்சு இடம்பெற்றது. இந்தப் பேச்சு தற்போது முடிந்திருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நிர்வாகங்களை அமைப்பது சம்பந்தமான பேச்சு. அது உருவாகுவதற்கக் காரணம் தேர்தல் முடிந்த கையோடு நாங்கள் எங்களுடைய நிலைப்பாடு ஒன்றை வெளிப்படையாகச் சொல்லியிருந்தோம். அதாவது ஒவ்வொரு சபைகளிலும் எந்தக் கட்சிக்கு அதிகூடிய உறுப்பினர்கள் இருக்கின்றனரோ அந்தக் கட்சி அந்தச் சபையிலே நிர்வாகங்களை அமைப்பதற்கு மற்றக் கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று சொல்லியிருந்தோம். இந்தப் பொதுவான கோட்பாட்டை நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடனும் இரண்டு சுற்றுப் பேச்சுகளின்போது பேசியிருக்கின்றோம். பொதுவாக அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஒரு கட்சிக்கு ஆட்சி அமைக்க மற்றமொரு கட்சி ஆதரவளிக்கின்றபோது அந்தச் சபையிலே மற்றக் கட்சிக்குக் கணிசமான ஆசனங்கள் இருந்தால் அவர்களுக்குப் பிரதி தவிசாளர் பதவி கொடுக்கப்படும் என நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் ஏற்றுக்கொண்ட ஒரு விடயம். அப்படியெனில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கிலே 35 இற்கும் மேற்பட்ட சபைகளில் ஆட்சி அமைக்கும். ஆனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வவுனியா மாநகர சபையில் மட்டும்தான் அவர்களின் பிரதிநிதி ஒரு வர்மேயராக வரக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. இதனால் ஓர் நல்லெண்ண சமிக்கையாக மேலும் நான்கு சபைகளில் தங்களுக்குத் தவிசாளர் பதவிகளை வழங்க முடியுமா என்று அவர்கள் கேட்டிருந்தார்கள். நாங்கள் அது சம்பந்தமாக ஆராய்கின்றோம், எமது கட்சியில் அரசியல் குழுவில் இது தொடர்பில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என அவர்களுக்குச் சொல்லியிருக்கின்றோம். சில வேளைகளிலே அப்படியான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு நாங்கள் அந்த விடயத்தைச் சொல்லியுள்ளோம்.

இந்தச் சூழலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தானாக ஓர் அறிவிப்பை விடுத்திருந்தார். அதாவது நாங்கள் சொன்ன அதே நிலைப்பாட்டை அவர் தெரிவித்திருந்தார். எந்தச் சபையில் எந்தக் கட்சிக்கு அதிகூடிய ஆசனங்கள் இருக்கின்றதோ அங்கே அந்தக் கட்சி ஆட்சி அமைக்கத் தாங்கள் ஆதரவு வழங்குவோம் என்று அவர் அறிவித்திருந்தார்.

இணக்கப்பாட்டோடு சேர்ந்து இயங்குவதாக இருந்தால் கொள்கை அளவிலே முழுமையாக ஏற்பட வேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கின்றார். நிர்வாகங்கள் அமைப்பதிலே அவர்களுடைய நிலைப்பாடும் நாங்கள் ஏற்கனவே அறிவித்திருந்த நிலைப்பாடும் (ஏற்கனவே எனச் சொல்கின்றபோது இந்தத் தடவை மட்டுமல்ல 2018 இலும் நாங்கள் இதே நிலைப்பாட்டையே அறிவித்திருந்தோம்) ஒரே மாதிரியான நிலைப்பாடாக இருந்த காரணத்தினால்தான்

07



# சீரற்ற வானிலையால் 1,321 பேர் பாதிப்பு

நாட்டில் தொடரும் கனமழையுடன் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களின் காரணமாக கொழும்பு மாவட்டத்தின் 245 குடும்பங்களைச் சேர்ந்த 1,321 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையின் காரணமாக கொழும்பு மற்றும் ஹோமாகம பிரதேசங்களில் உள்ளவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த மாவட்டத்தில் 03 வீடுகள் முழுமையாகவும், 239 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

## இணக்கப்பாடு எதுவும்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எங்களுடைய கட்சியில் தலைவர் அவர்களோடு இது தொடர்பில் பேச வேண்டும் என்று அழைத்தபோது அவர்கள் உடனடியாக அதற்கு இணங்கி எங்களோடு பேசுவதற்கு வந்திருக்கின்றார்கள். அப்படியாக எந்தவிதமான மறுப்பும் இல்லாமல் தயக்கமும் இல்லாமல் பேச வந்தமைக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். எமது கட்சியின் தலைவர் கூட்ட ஆரம்பத்திலேயே இதனை அவர்களுக்குத் தெரிவித்தார்.

நாங்கள் பேசியபோது அவர்கள் தங்களது தனிப்பட்ட நிலைப்பாடாக அதனை அறிவித்ததாகச் சொன்னார்கள். அது எங்களுக்குத் தெரியும். கடந்த புதன் கிழமை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினருடன் இடம்பெற்ற பேச்சின் போதும் அதையே தாங்கள் சொன்னதாக எங்களுக்குச் சொன்னார்கள். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரும் எங்களுக்கு அதையேதான் அறவித்திருக்கின்றார்கள்.

இப்போது வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற சபைகளில் நிர்வாகங்கள் அமைப்பதில் எங்களுடைய நிலைப்பாடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் நிலைப்பாடும் ஏறத்தாள ஒரே நிலைப்பாடாக இருக்கின்ற காரணத்தால் அந்த அடிப்படையிலேயேதான் சபைகள் அமைக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் அல்லது உறுதியாகச் சொல்லலாம். இதை ஓர் இணக்கப்பாடாக அறிவிக்க அவர்கள் விரும்பவில்லை. ஆகையினாலே இணக்கப்பாடு இல்லை என்றே வைத்துக்கொள்ளலாம். ஆனால் இணங்கியிருக்கின்றோம்.

கொள்கை விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் இன்று பெரிதாகப் பேசிக் கொள்ளவில்லை. ஆனாலும், ஓரளவு மக்கள் நலன் சார்ந்து, தமிழ் மக்களின் எதிர்காலம் சார்ந்து எமது கட்சியின் தலைவர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கையை முன்வைத்தார். நாங்கள் இணங்கிச் செயற்படுவதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும் எனச் சொன்னபோது அவர்கள் அதற்குப் பெரிதாக மறுப்புத் தெரிவிக்கவில்லை.

இந்தப் பேச்சின் அடிப்படையை எங்களது மத்திய செயற்குழுவுக்கும், அரசியல் குழுவுக்கும் தெரிவிப்போம். நாங்கள் ஒரு முடிவை எடுத்து எதிர்வரும் நாள்களில் தமிழ்த் தேசிய முன்னணியினரோடும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடனும் ஒருமித்த ஒரு நிலைப்பாட்டுக்கு இணங்குவதை ஒரு குறிக்கோளாக வைத்து பேச்சுகளில் ஈடுபடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்." – என்றார்.

## தேர்தலில் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். தாவடியில் அமைந்துள்ள பொக்ஸ் விடுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சில நாள்களுக்கு முன்பு என்னுடன் தொடர்பு கொண்டு பேச விரும்புவதாக அறிவித்தார். அதில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரனும் தானும் பேசவுள்ளதாகக் கேட்டதற்கு அமைய நாங்கள் சந்திப்பதற்கு இணங்கியிருந்தோம். அதற்கமைய இந்தப் பேச்சு இடம்பெற்றது.

நாம் கொள்கை அடிப்படையிலான இணக்கப்பாட்டை இந்தப் பேச்சின்போது வலியுறுத்தினோம். அதில் எந்த இணக்கமும் எட்டப்படவில்லை.

அந்த இணக்கப்பாடின்றி வெறுமனே சபைகளை கைப்பற்றுவதற்காக மட்டும் நாம் இணைய முடியாது.

எனவே, ஒரு தலைப்பட்சமாக நாம் ஒரு முடிவு எடுத்துள்ளோம். முன்னர் கூறியது போன்று முதலிடத்தில் இருக்கும் கட்சி தவிசாளர் பதவியைப்பெறவும், இரண்டாவது இடம்பெற்ற கட்சி உப தவிசாளர் பதவியைப் பெறவும் நாம் ஆதரவளிப்போம்." – என்றார்.



# பெரியநீலாவணையில் நேற்று குடும்பப் பெண் வெட்டிக்கொலை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டம், கல்முனை, பெரியநீலாவணை கிராமத்தில் இரண்டு பிள்ளைகளின் தாய் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெரியநீலாவணை – நீலாவணன் வீதியில் வசிக்கும் மேற்படி பெண் அவரது வீட்டில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் நேற்று மதியம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயான திருமதி மனோதர்ஷன் விதுஷா (வயது 38) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அம்பாறை குற்றத் தடுப்புப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மோப்ப நாய் உதவிகளுடன் சந்தேகநபர்கள், தடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவம் நடைபெற்ற வீட்டில் இருந்த சி.சி.ரி.வி. கமராவின் உதிரிப் பாகங்களையும் கொலைச் சந்தேகநபர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு வருகை தந்த கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுத்தீன் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் உயிரிழந்தவரின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக அம்பாறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாரைப் பணித்தார்.

இந்தக் கொலை தொடர்பான விரிவான விசாரணைகளை அம்பாறை குற்றத் தடுப்புப் பொலிஸார் பெரியநீலாவணை பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழ்க் கட்சிகளின் கவனத்துக்கு!

முன்னைய ஆட்சியாளர்கள், நிர்வாகிகள், அதிகாரிகள் போன்றோரின் ஊழல், மோசடிகள், முறைகேடுகள், லஞ்ச லாவண்யங்கள் போன்றவைதான் நாட்டைக் குட்டிச் சுவராக்கி பொருளாதார சீரழிவை ஏற்படுத்தின என்ற உண்மையைத் தமது அரசியல் பிரசாரத்துக்கு தந்திரோபாயமாக பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ளது தேசிய மக்கள் சக்தி.

பழைய அரசுத் தலைவர்கள், நிர்வாகிகள், அதிகாரிகள் போன்றோரின் இந்த முறைகேடுகள், ஊழல்கள் குறித்து விசாரணைகள் நடத்தி, சட்டத்தின் முன் அவர்களை நிறுத்தி, பொறுப்புக் கூறவைத்து, கடும் நடவடிக்கை எடுப்போம் எனக் கங்கணம் கட்டி நிற்கின்றனர் ஆட்சியாளர்கள். அதில் அவர்கள் எவ்வளவு தூரம் வெற்றி பெறுவார்கள் என்பது தெரியவில்லை.

ஆனால், தென்னிலங்கையில் பல இடங்களிலும் உள்ளூராட்சி சபைகளில் தனித்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்குப் போதிய பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளாத ஆளும் தரப்பினர், பல சபைகளிலும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக முறைகேடான வழிகளை நாடுகின்றனர் என்ற செய்திகள், குற்றச்சாட்டுக்கள் பரவலாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மறுபுறத்தில் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் கொட்டத்தை இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அடக்கி, மேவி மேலே நிற்கின்றன. அதனால் வடக்கு கிழக்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் தமிழ் தேசியக் கட்சிகளின் கைகளுக்கு வருவது தவிர்க்க முடியாத யதார்த்தம்.

இந்தச் சமயத்தில்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுக்கு, இரண்டு தடவைகள் அவதானமாகவும் பொறுப்போடும் செயல்பட வேண்டியவையாக இருக்கின்றன.

உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகள் தமிழ் தேசியத்துக்கு மீளெழுச்சியாகக் கிட்டி இருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. அது குறித்து ஆளும் தேசிய மக்கள் சக்தி பெரும் சீற்றத்துடன் - எரிச்சலுடன் - காழ்ப்புணவுடன் - இருக்கின்றது என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.

இந்தச் சமயத்தில் தமிழ் தேசியக் கட்சிகள் தாம் கைப்பற்றும் உள்ளூராட்சி சபை நிர்வாகங்களுக்கு நிர்வாகிகளைத் தேர்வு செய்து நியமிப்பதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். முன்னைய காலத்தில் உள்ளூராட்சி சபைகளில் குளறுபடி செய்தவர்கள், அந்தச் சமயத்தில், அப்போதைய அரசியல் சூழ்நிலையில் தப்பி இருக்கலாம். ஆனால் பல விடயங்களும் காலம் கடந்தும் விசாரணைக்கும், புலனாய்வுக்கும், கணக்காய்வுக்கும் உட்படுத்தப்படக்கூடிய திறந்த நிலையிலே இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

எவ்வளவோ காலத்துக்கு முன்னர் நடந்த விடயங்களுக்காக பிள்ளையான் இப்போதும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றார்.

அதுபோல தமிழ் தேசியத் தரப்புகள் இப்போது தங்கள் தரப்பு நிர்வாகிகளாகத் தேர்வு செய்வோர் முன்னைய காலங்களில் குளறுபடிகள், மோசடிகள், முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தால், இந்த ஆட்சியாளர்களின் கீழ் அவை துருவித் துருவி ஆராய்ந்து, விரைந்து நோண்டி நுங்கெடுக்கப்படும் சாத்தியங்கள் அதிகம் உண்டு.

புதிய நிர்வாகிகள் பதவியேற்று ஓரிரு வாரங்களுக்குள்ளேயே பழைய முறைகேடுகளுக்காக அத்தகையோர் நடவடிக்கைக்குள்ளாகும் வாய்ப்புகள் இருப்பதாக ஆங்காங்கே செய்திகள் கசிகின்றன.

உரிமைக்கான தமிழ்த் தேசியத்தின் போராட்டமும் எழுச்சிச் செயற்பாடுகளும் அத்தகைய ஓரிரு முன்னாள் ஊழல் பெருச்சாளிகளினால் முழுமையாக சீரழிந்து போகும் ஆபத்து உண்டு. அத்தகையோரை நிர்வாகிகளாக முன்தள்ளும் அரசியல் தலைவர்களும் அதன் விளைவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டி இருக்கும் என்பதை கட்சி தலைமைகள் இப்போதே சம்பந்தப்பட்டோருக்கு அறிவுறுத்தி, நினைவூட்டி, கண்டிப்புடன் உரைப்பது முக்கியமான விடயமாகும்.

தமிழ் தேசியக் கட்சிகளின் தலைமைகளுக்கு இந்த விடயம் சமர்ப்பணம். அத்தகைய நெருக்கடி வந்தால் அந்தச் சமயத்தில் நாம் இப்படி நேரத்துடன் சுட்டிக் காட்டினோம் என்பதை நினைவுபடுத்துவோம்.



# தமிழகத்துக்கான எனது குரல் மாநிலங்களவையில் ஒலிக்கும்

## முதல்வரை சந்தித்து கமல் கூறினார்

தமிழகத்துக்கான என் குரல் மாநிலங் களவையில் முதல்முறையாக ஒலிக்கப் போகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டா லினை சந்தித்த மக்கள் நீதி மய்யம் தலை வர் கமல்ஹாசன் தெரிவித்துள் ளார்.

ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் நேற்று அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டா லினை சந்தித்தார். அப்போது மாநிலங் களவைத் தேர்தலில் போட்டியிட ம.நீ.ம. கட்சிக்கு இடம் ஒதுக்கியதற்காக முதல்வ ருக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண் டார். அப்போது, துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரை முருகன், எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு, மநீம கட்சியின் பொதுச் செயலாளர் ஆ.அருணாச்சலம், துணை தலைவர் கள் ஏ.ஜி.மவுரியா, தங்கவேல் உள்ளிட் டோர் உடன் இருந்தனர்.

முதல்வர் ஸ்டாலினை சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் கமல்ஹாசன் கருத்து தெரிவிக்கையில்,

“மாநிலங்களவைத் தேர்தலில் போட்டி யிடுவதற்கான முன்னேற்பாடுகளை செய்யுமாறு முதல்வர் கூறினார். அதே போல், தி.மு.க. மூத்த நிர்வாகிகள் தங்கள் அறிவுரைகளையும் அனுபவங்களையும் எங்களிடம் கூறினார்கள். வேட்புமனு தாக்கல் எப்போது தாக்கல் செய்யலாம் என்பது குறித்து அவர்களிடம் கலந்தா லோசிக்கப்படும்.

நான் எப்போதுமே தமிழகத்துக்காகப் பேசிக்கொண்டிருக்கிறேன். தற்போது தமிழகத்துக்கான என் குரல் மாநிலங்கள வையில் முதல்முறையாக ஒலிக்கப்போகி றது அவ்வளவுதான். ஆரம்பத்தில் தி.மு.கவை எதிர்த்த நீங்கள் இப்போது இணைந்து செயல்படுகிறீர்களே என்று கேட்கிறீர்கள். நாட்டுக்கு தேவை என்ப தால் தி.மு.கவுடன் இணைந்து செயல் படுகிறேன்.

கன்னட மொழி தொடர்பாக நான் தெரிவித்த கருத்தால் எழுந்துள்ள சர்ச்சை குறித்தும், நான் மன்னிப்பு கேட்காவிட்டால் எனது படத்துக்கு தடை விதிக்கப்படும் என்று மிரட்டல் விடுக்கப் பட்டிருப்பது குறித்தும் கேட்கிறீர்கள். இதற்கு முன்பும் இதுபோன்று நான் மிரட்டப்பட்டிருக்கிறேன். எனது கருத்து தவறாக இருந்தால் நான் மன்னிப்பு கேட்பேன். தவறாக இல்லாவிட்டால் நான் மன்னிப்பு கேட்க மாட்டேன். இது எனது வாழ்வியல் முறை.

இது ஜனநாயக நாடு. நான் சட்டத் தையும் நியாயத்தையும் நம்புகிறேன். எப்போதும் அன்புதான் வெற்றிபெறும். கன்னடம் மீதும், தெலுங்கு மீதும், கேர ளம் மீதும் நான் வைத்திருக்கும் அன்பு உண்மையானது. ஏதோ ஒரு மறை முக செயல்திட்டத்தோடு செயல்படுப வர்களைத் தவிர வேறு யாரும் என்னை சந்தேகிக்க மாட்டார்கள்.” என்றார்.





# இலங்கைக்கு கடத்தவிருந்த 175 கிலோ ஏலக்காய் பறிமுதல்

தமிழகம், தங்கச்சிமடம் அருகே இலங் கைக்கு கடத்துவதற்காக வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 6 லட்சம் இந்திய ரூபா மதிப்பிலான 175 கிலோ ஏலக்காய் மூட்டைகளை நேற்று ஒருங்கிணைந்த குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். வீட்டின் உரி மையாளரையும் தேடி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை பகுதி இலங்கைக்கு மிக அருகில் இருப் பதால் இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லை ஊடாக இலங்கைக்கு நாட் டுப்படகில் கஞ்சா, கடல் அட்டை, பீடி இலை பண்டல்கள், ஏலக்காய், சுக்கு, செருப்பு, திமிங்கலம் துடுப்பு, உள் ளிட்டவைகள் கடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தங்கச்சிமடம் கடற் கரையில் இருந்து இலங்கைக்கு நாட்டுப் படகில் ஏலக்காய், சுக்கு, வெளிநாட்டு சிகரெட் உள்ளிட்ட பொருள்கள் கடத்த இருப்பதாக இராமநாதபுரம் ஒருங்கி ணைந்த குற்ற புலனாய்வு பிரிவு பொலி ஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படை யில் நேற்று அதிகாலை தங்கச்சிமடம் அடுத்த அய்யன் தோப்பு கடற்கரை கிராமத்தில் திடீர் சோதனை நடத்தி னர்.

இதன் போது அங்கிருந்த வீட்டில் இலங்கைக்கு படகில் கடத்திச் செல்வ தற்காக 7 மூட்டைகளில் 175 கிலோ ஏலக்காய் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து ஏலக்காய் மூட்டை களை பறிமுதல் செய்து தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இது தொடர்பாக தலைம றைவான வீட்டின் உரிமையாளரை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின் றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட ஏலக்காய் இந்திய ரூபா மதிப்பு 6 லட்சம் இருக்கும் எனவும் ஏலக்காய் மூட்டைகள் இரா மேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத் தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யா - இந்தியா - சீனா கூட்டமைப்பை மீண்டும் செயற்படுத்த தீவிர முயற்சி

## ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தகவல்



ரஷ்யா - இந்தியா - சீனா கூட்டமைப்பின் செயல்பாடுகளை மீண்டும் தொடங்குவதில் மாஸ்கோ உண்மையிலேயே ஆர்வமாக உள்ளது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் பெர்ம் நகரில் நடைபெற்ற யூரேசியா சர்வதேச சமூக மற்றும் அரசியல் மாநாட்டில் உரையாற்றிய செர்ஜி லாவ்ரோவ்,

"முன்னாள் ரஷ்ய பிரதமர் யெவ்ஜெனி ப்ரிமகோவின் முன்முயற்சியின் பேரில் பல ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய முக்கூட்டின் வடிவமைப்புக்குள் பணிகளை விரைவில் மீண்டும் தொடங்குவதில் நாங்கள் உண்மையான ஆர்வத்தைக் கொண்டிருக்கிறோம். இது தொடர்பாக 20-க்கும் மேற்பட்ட ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

வெளியுறவுக் கொள்கைத் தலைவர்கள் மட்டத்தில் மட்டுமல்லாமல், மூன்று நாடுகளின் பிற பொருளாதார, வர்த்தக மற்றும் நிதி நிறுவனங்களின் தலைவர்களுடனும் இந்த கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. எல்லையில் நிலைமையை எவ்வாறு எளிதாக்குவது என்பது குறித்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே தற்போது ஒரு புரிதல் எட்டப்பட்டுள்ளது. இந்த ஆர்ஐசி முக்கூட்டை மீண்டும் தொடங்குவதற்கான நேரம் வந்துவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்தியாவை சீனாவுக்கு எதிரான சூழ்ச்சிகளில் இறக்க நேட்டோ வெளிப்படையாக முயற்சிக்கிறது. நமது இந்திய நண்பர்கள், அவர்களுடன் நடத்திய இரகசிய உரையாடல்களின் அடிப்படையில் நான் இதைச் சொல்கிறேன். உண்மையில் ஒரு பெரிய ஆத்திரமூட்டலாகக் கருதக்கூடிய இந்தப் போக்கை வெளிப்படையாகச் செய்கிறார்கள் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை," என்று தெரிவித்தார்.

ரஷ்யா, இந்தியா, சீனா கூட்டமைப்பு கல்வான் நெருக்கடிக்குப் பிறகு ஜூன் 2020 இல் முடக்கப்பட்டது. எனினும், 2024 ஒக்டோபரில் ரஷ்யாவின் கசானில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடியும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தை காரணமாக, இரு நாடுகளுக்கு இடையேயான உறவு மேம்பட்டு வருவது கவனிக்கத்தக்கது.

# தைவானுக்கான ஆயுத விற்பனையை அதிகரிக்கின்றார் டொனால்ட் ட்ரம்ப்





சீனாவிற்கு எதிராக தைவானுக்கு ஆயுத விற்பனையை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிகரிக்கவுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், டொனால்ட் ட்ரம்ப், தனது முந்தைய பதவிக்காலத்தில் வழங்கப்பட்டதை விட அதிக அளவில் ஆயுதங்களை தைவானுக்கு விற்க திட்டமிட்டுள்ளார்.

இது குறித்து தெரிவித்த அமெரிக்க அதிகாரிகள், சீனாவின் இராணுவ அழுத்தத்துக்கு எதிராக தைவானை பாதுகாக்கும் நோக்கத்தில் இந்த விற்பனைகள் நடைபெறவிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய ட்ரம்ப் நிர்வாகம் 18.3 பில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுதங்களை தைவானுக்கு விற்ற நிலையில், பைடன் நிர்வாகத்தில் 8.4 பில்லியன் டொலராக குறைக்கப்பட்டது.

இதன்படி, தற்போதைய புதிய ட்ரம்ப் நிர்வாகம் தைவானுக்கு அதிக ஆதரவு அளிக்கப்போகிறது என்பது உறுதியாகி இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், அமெரிக்காவானது தைவானின் பாதுகாப்பு செலவுகளை அதிகரிக்க ஒத்துழைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளத தைவானின் ஜனாதிபதி லாய் சிங்-டே தலைமையிலான அரசு, பாதுகாப்பு செலவுகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மூன்று சதவீதமாக உயர்த்த திட்டமிட்டுள்ளது.

தைவானுக்கு வழங்கப்படும் புதிய ஆயுதங்களில், ட்ரோன்கள், ஏவுகணைகள் மற்றும் குண்டுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவின் தாக்குதலை தடுக்க இது முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

சீனா, தைவானை தன் பகுதியாகக் கருதி ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது ஆனால் தைவான் மக்கள் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க தங்களுக்கு மட்டுமே உரிமை உண்டு என தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு,ஆலையடிவேம்பு,நாவிதன்வெளி,பொத்துவில் பிரதேச சபைகளில் நிர்வாகத்தை அமைக்க உடன்பாடு

## தமிழரசின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் கூறுகிறார்

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு, ஆலையடிவேம்பு , நாவிதன்வெளி, பொத்துவில் ஆகிய நான்கு பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான இறுதிக்கட்ட உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் ஓரிரு தினங்களில் இங்கு விஜயம் செய்ய விருக்கும் எமது கட்சியின் தலைவர் சிவஞானம் மற்றும் செயலாளர் சுமந்திரனிடம் இதனை சமர்ப்பித்து கலந்துரையாடி இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பொத்துவில் தொகுதி அமைப்பாளருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார் .

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி அமைப்பு மற்றும் தவிசாளர், உப தவிசாளர், பட்டியல் உறுப்பினர்கள் தேர்வுகள் எந்தக் கட்டத்தில் உள்ளன? என்ற கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காரைதீவு பிரதேச சபையில் எமது தமிழரசு கட்சியுடன் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .

அதுபோல பொத்துவில் பிரதேச சபையிலும் முஸ்லிம் காங்கிரஸுடன் எமது கட்சி இணைந்து ஆட்சி அமைக்க உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

நாவிதன்வெளி மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபைகளில் எமது தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க அங்குள்ள சுயேச்சை குழுக்கள் இணக்கம் தெரிவித்து இருக்கின்றன .

எனவே, இந்த நான்கு இடங்களிலும் ஆட்சியமைப்பதற்கான இறுதி முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.




### தவிசாளர் உபதவிசாளர் தெரிவு

காரைதீவு பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், மு.கா. உறுப்பினர் உப தவிசாளராகவும் தெரிவதற்கு இணக்கம் காணப்பட்டது.

எமது இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு பிரதேசக் கிளை சேர்ந்து தவிசாளர் தெரிவு தொடர்பாக, தெரிவான உறுப்பினர்கள் மற்றும் கிளைக்குழு உறுப்பினர்கள் இணைந்து கலந்துரையாடி முடிவெடுத்து நேற்று எங்களுக்கு அறிவித்துள்ளது . அதன்படி அங்கு கூடுதல் வாக்குக ளைப் பெற்ற முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறிலை தெரிவுசெய்ய பெரும் பான்மையாக முடிவெடுத்திருக்கிறார்கள் .

ஆலையடிவேம்பில் முதல் இரண்டு வருடங்கள் எமது கட்சியின் உறுப்பினர் தவிசாளராக இருப்பார். உப தவிசாளராக சுயேச்சை அணியின் தலைவர் இருப்பார் . அவரை எமது கட்சிக்குள் உள்வாங்கிக் கொண்டு அடுத்த இரண்டு வருட காலத்தில் அவர் தவிசாளராக கடமை ஆற்றுவார். எமது கட்சியைச் சேர்ந்தவர் உபதவிசாளராக கடமை ஆற்றுவார் .நாவிதன்வெளி பிரதேச சபையில் எமது உறுப்பினர் தவிசாளராகவும் சுயேச்சை அணியின் தலைவர் உப தவிசாளராகவும் கடமை ஆற்றுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது .

பொத்துவில் பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் தவிசாளராகவும், எமது உறுப்பினர் உபதவிசாளராகவும் இயங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டிருக்கின்றது.

எது, எவ்வாறு இருப்பினும் இந்த உடன்பாடுகள் ஓரிரு நாளகளில் இங்கு விஜயம் செய்ய உள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், செயலாளர் சுமந்திரன் ஆகியோரிடம் கலந்துரையாடிய பின்பே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் சொன்னார்.

# இவ்வருடமும் ‘மன்னரின் விருந்தினர்களாக’ இருபது பேருக்கு ஹஜ் செய்வதற்கு வாய்ப்பு

(எஸ். சினீஸ் கான்)

இரு புனித மஸ்ஜித்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களால் உலகளாவிய ரீதியில் 100 நாடுகளைச் சேர்ந்த 1300 பேருக்கான தனது முழு செலவில் ‘மன்னர் விருந்தினராக’ அழைக்கப்பட்டு ஹஜ் செய்வதற்கான சந்தர்ப்பம் வழுங்கப்படுகிறது.

இஸ்லாமிய உலகம் முழுவதும் உள்ள மத, கல்வி மற்றும் அறிவுசார் தலைவர்களுடன் உறவுகளை வலுப்படுத்தவும், நாகரிக மற்றும் மத உரையாடலை ஊக்குவிக்கவும், தனித்துவமான மற்றும் மூலோபாய முயற்சியாக இத் திட்டம் நடைமுறைப்படுத் தப்படுகிறது. இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் நஸார் அல்கஸம் அல்கஹ்தானி அவர்களின் கோரிக்கைக்கமைய இம்முறையும் இலங்கைக்கு 20 பேர் பயணிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.



அதேபோல் வருடாவருடம் இலவசமாக உம்ரா செய்யும் சந்தர்ப்பமும் தூதுவர் மூலமாக இலங்கை மக்களுக்கு கிடைப்பது குறிப்பிடத்தக்கது.






# நாம் இறக்க முன்னர் எமக்கு நீதியை வழங்குங்கள் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

## வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்பாட்டம்

(கி.வசந்தன்)

காணாமல் போன உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறியாமலே நம்மில் பலர் மரணித்துள்ளனர். எனவே எஞ்சியுள்ள நாங்களும் இறக்கும் முன்னர் எமக்கான நீதி கிடைக்கவேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்பாட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

எமக்கான நீதிகோரி நாங்கள் தொடர்ச்சியாகப் போராடி வரும் நிலையில் எங்களில் 300இற்கும் மேற்பட்ட உறவுகளை இழந்துள்ளோம். தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலே அவர்கள் இறந் துள்ளனர்.

எனவே மீதமுள்ள சாட்சிகளாக உள்ள நாங்களும் இறக்க முன்பாக எமக்கான நீதியை சர்வதேசம் வழங்க வேண்டும். கொலைக்குற்றங்களை செய்த அரச படைகளை விசாரிக்க இயலாத அரசாங்கம் தமிழ் இனத்தை ஏமாற்றி வருகின்றது.

எனவே எதிர்வரும் ஐ.நா. கூட்டத் தொடரிலாவது எமக்கான சர்வதேச நீதிப்பொறிமுறையூடான நீதி ஒன்றை வழங்கவேண்டும் என்று கேட்டுநிற்கின்றோம். – என்றனர்.












# யாழ். மணிக்கூண்டு கோபுரம் - புதிய பஸ் நிலையம் இணைக்கும் வீதியை மீள திறந்து விடக் கோரிக்கை

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்திற்கு அருகில் இருக்கக்கூடிய வீதியான, யாழ்ப்பாணம் மணிக்கூண்டு கோபுரத்தையும் புதிய பஸ் தரிப்பிடத்தையும் இணைக்கும் வீதியினை மாணவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்களின் நலனுக்காகத் திறந்து வைக்க வேண்டும் என்ற முன்மொழிவை தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் முன் வைத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டேன். அந்தக் கட்டடமானது முறையான பாவனைகள் இன்றி பழுதடைந்து வருகின்றது. முன்னர் அந்த இடத்தில் திறந்த வெளி கலையகம் ஒன்று இருந்தது. அதனை அகற்றி விட்டே அந்த நிலம் கையளிக்கப்பட்டது. அதற்கு அருகில் உள்ள வீதி மூடப்பட்டு இருக்கின்றது. இதனால் மாணவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். குறைந்தபட்சம் அதனை நடைபாதையாகவேனும் திறந்துவிட வேண்டும்.




கடந்த காலங்களில் கட்டுமானப் பணிகளுக்காகவே வீதி மூடப்பட்டது. இப்போது கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து விட்டன. தொடர்ந்தும் வீதியை மூடி வைத்திருக்க முடியாது. எனவே யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சொந்தமான அந்த வீதியை மாணவர்களின் நலனைக் கொண்டு திறக்க வேண்டும். அடுத்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குறித்த வீதியை திறப்பதற்கான நடவடிக்கைளை யாழ் மாநகர சபையினர் மேற்கொள்ளவேண்டும். – என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்தக் கட்டடத்தின் வரைபடத்தின் பிரகாரம் குறித்த வீதியை தொடர்ந்தும் வீதியாக வைத்திருக்க முடியாது. அந்தக் கட்டடத்தின் அருகில் உள்ள பகுதியோ டு மக்கள் பொழுதை கழிக்கக்கூடிய இடமாகவே அது வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த கட்டடம் முழுமையாக யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கையளிக்கப்படும் பட்சத்தில் குறித்த வீதியை முழுமையாக திறப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் என யாழ் மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார்.

வீதியை திறப்பு சம்பந்தமாக யாழ் மாநகர சபை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

# கீரிமலை ஜனாதிபதி மாளிகையை யாழ் பல்கலைக்கு வழங்க விடாமல் முரண்டு பிடிக்கும் ஆளும் தரப்பினர்

(பிரபாகரன் டிலக்சன்)

கீரிமலை ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், அர்ச்சுனா முன்வைத்த நிலையில் அதனை பல்கலைக்கழகத்தால் பராமரிக்க முடியுமா என்ற பிரச்சினை உள்ளது என தேசிய மக்கள் சக்தியினர் கூட்டாகப் பின்னடிப்புச் செய்தனர்.

யாழ்ப்பாணம் கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை பயனுள்ளவகையில்பயன்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகளை கோரிய நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்திற்கான திட்ட முன்மொழிவு, இரண்டு தனியார் பல்கலைக்கழகங்கள் அரம்பிப்பதற்கும், சுற்றுலா மையம் அமைப்பதற்குமென மொத்தமாக 4 முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன என நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதே சிறந்தது. இதனை விடுத்து தனியாருக்கு வழங்குவது என்றால் இதனை ஆராயவேண்டும். மேலும் இந்தக் கட்டடம் தனியாருக்கு சொந்தமான காணியில் அமைந்துள்ளது. எனவே காணி உரிமையாளர்களுடன் கலந்துரையா டாமல் எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாது – என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் கருத்து தெரிவிக்கையில் – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதே சிறந்தது. தனியார் பயன்படுத்துவது எனில் முறையாக வெளிப்படையான கோரல் மூலமே வழங்கப்பட வேண்டும். நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டமிடல்கள் இன்றி வெறுமனே காணிகளை கைப்பற்றுவதையே நோக்காகச் செயற்படுகின்றது, இதனை மத்திய அரசாங்கத்திடம் கொடுக்காமல் எங்களுக்குரிய வளமாக பயன்படுத்த வேண்டும். – என்றார்.

இதன்போது அமைச்சர் இராமலிங்கம்சந்திரசேகர் கருத்துதெரிவிக்கையில், இந்தக் கட்டடத்தை யாழ் பல்கலைக்கழகத்தால் பராமரிக்க முடியுமா என்ற பிரச்சினை உள்ளது. கட்டடம் முழுவதுமாக சேதமடைந்துள்ளது. அதனை அரசாங்கத்தால் புனரமைக்கமுடியாது. தற்போது கட்டுமானத்திற்கு செலவிடும் தொகையைவிட புணரமைக்கும் செலவு அதிகம். –என்றார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கருத்து தெரிவிக்கையில், இந்தக் கட்டடம் கடற்கரைக்கு அருகில் இருப்பதால் அதனை பல்கலைக்கழகம் தொடர்ந்தும் புனரமைப்பது கடினம் என்றார்.

மேலும் தேசிய மக்கள் சக்தியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜாவும் இந்தக் கட்டடம் முழுவதுமாகப் பாழடைந்துவிட்டது. – என்றார்.

யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதி மாளிகையானது சுமார் 29 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ளது. 17 காணி உரிமையாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் ஆறு பேர் காணிகளை வழங்க சம்மதம் தெரிவித்துள்ளனர். ஒருவர் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகம் இந்து கற்கைகள் பீடத்திற்கான முன்மொழிவை மாத்திரமே தந்துள்ளது. குறித்த இடமானது இந்து கற்கைகள் பீடத்திற்கு மேலதிகமான இடத்தினையும் கொண்டுள்ளது. எனவே வேறு பீடங்களையும் இதில் அமைக்க விரும்புகிறீர்களா என பல்கலைக்கழக துணைவேந்தரிடம் முன்மொழிவைப் பெற்றுவிட்டு தீர்மானிப்போம். – என்றார்.

இந் நிலையில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பராமரிக்க முடியாது எனக் கூறுவது அதனை தனியாருக்குத் தாரை வார்க்க முயற்சியா என சமூக ஆர்வலர்கள் கேள்வியெழுப்பி வருகின்றனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

37

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



சிங்கள மக்களின் மனோபாவங்களாலும், குணாதிசயங்களாலும்தான் தமிழ் மக்களது உரிமைக் கோரிக்கைகள் பின் இனப் பிரச்சினையாக இவ்வாறு உருப்பெற்று, இவ்வளவு சீரழிவுக்குள்ளாகின என பரப்புரைகள் செய்யப்படுகின்றன.

இதில் நியாயமும் உண்மையும் இல்லாமல் இல்லை.

ஆனால் அதன் மறுபக்கத்தையும் பார்த்து, அவை எவ்வளவு தூரம் இந்த சீரழிவுகளுக்கு கைலாகு கொடுத்தன என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களிடையே நிலவும் சுயநலம், இறுமாப்பு, பிடிக்சுராவித்தனம், தன்னார்வம், அளவுக்கு மீறிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் எனப் பல. இந்தக் குணாதிசயங்களில் ஒன்றோ, சிலவோ கூடி அவர்கள் இணக்கத்துக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்களை தட்டிப் பறித்து இருக்கின்றன.

இவை ஒவ்வொன்றையும் விரிவாக ஆராய்ந்து செல்வது தேவையற்றது. இவை பலமாக விமர்சிக்கப்பட்டவை.

நிகழ்கால நடப்புகளை பார்த்தால் ஜனாதிபதி தேர்தலுக்கு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, தமிழ் மக்களின் ஒற்றுமையான செய்தி ஒன்றைச் சொல்ல வேண்டும் என சிலதரப்புகள் முன்னின்று பொது வேட்பாளரையும் நிறுத்தின. நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கட்சிகள் படு தோல்வியைச் சந்திக்க, 75 வருட கால அரசியல் நிகழ்ச்சி நிரலில் முதல் முறையாக சிங்களப் பெரும்பான்மை கட்சிக்கு கணிசமான வாக்குகளை தமிழ் மக்கள் அளித்த அந்தப் படிப்பினை இருந்தும், உள்ளூராட்சித் தேர்தலில் கூட தமிழ் தேசியக் கட்சிகள் பிரிந்து மூன்று பகுதிகளாக வாக்குகள் கேட்டார்கள். இன்று தங்களுக்குள் யார் உள்ளூராட்சி நிர்வாகங்களை அமைப்பது என்று பேரம் பேசுகிறார்கள். மாகாண சபைத் தேர்தல்கள் இப்போது உள்ள நிலையில் எப்பொழுது வரும் என்பது நிச்சயமில்லை. அதற்கிடையில் தனி மனிதர்கள் சேறு வாரி வீசும் படலம் தேவையற்றவை. ஆனால் நடத்தப்படுகின்றன. இவர்களின் தராதரங்கள் இவைதானா என மக்களை சிந்திக்கத் தூண்டுவது, அவர்களை தேசிய மக்கள் சக்தியின் பால் திருப்பி

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

விடலாம் - இவை தானே தாங்கள் தேசியத்துக்காக நின்று பெற்றது என்ற வெறுப்புகளில்.

இவையெல்லாம் நாட்டில் தமிழ் மக்கள் தம் அரசியல் எதிர்காலம் எதுவென்பதைப் பற்றிச் சிந்திக்கும் சக்தியற்ற நிலையில் நிற்கும் போது அவர்களை, என் வழியா உன் வழியா என்ற ஏண்டாப்பிலான போட்டிகள், பொதுநிலைபாட்டுக்கு வந்து விட முடியாத அரசியல் சக்திகள், அவற்றின் ஈகோக்களால் பாழாகின்றன.

இது, இப்படி என்றால் புலத்தில் நாடு கடந்த அரசு குறித்து வாதப்பிரதிவாதங்கள் நடக்கின்றன. முன்னர், 'பொன்னம்பலம் எங்கள் பலம்', 'தந்தை செல்வா எங்கள் தந்தை', 'அமிர்தலிங்கம் எங்கள் தளபதி' என்ற கோஷங்கள் இருந்தன. ஆனால் ஆயுதப் போராட்ட வரவிற்குப் பின் பிரபாகரனை அவதார புருஷனாக்கி, ஏன் கடவுளாகக் கூட உயர்த்தி, கேள்விகளுக்கு மேற்பட்ட - விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவராக வடித்து - அவரை வைத்து, அவரது மரணத்தின் பின்னும், அவரது அல்ல, தங்களுக்கான அரசியல் நடக்கிறது. அதிலும் தப்பில்லை - அவற்றில் சிறிதளவேனும் தமிழ் விமோசனத்துக்கு பாயுமானால். ஆனால் இந்த இரண்டு நிலைகளும் எங்கோ ஒரு மையப்புள்ளியில் சந்திக்குமா?

அப்படிச் சந்திக்காவிட்டால், அன்றில் அப்படி ஓர் இணைப்பு இல்லாவிட்டால், இவை இரண்டினதும் பெறுபேறுகள் என்ன?

நாட்டில், போரில் வெற்றி கொண்டு, தமிழ் மக்களை உளரீதியாக கட்டுப்பாட்டில் வைத்து, அந்தக் கட்டுப்பாடு சிதைந்து விடும் என்ற பயங்காட்டலைத்தான் இராணுவத் தளபதி பொன்சேகா போன்றோர் புலம்பெயர் நடப்புகளை வைத்து நாட்டில் கிலி ஏற்படுத்துகிறார்கள்.

இன்று கனடாவில் இனப்படுகொலை தூபி எழுப்பியோரும், அங்கு கொடி பிடிப்போரும் மக்களின் உணர்வை காலமெல்லாம் நினைவாக்கியுள்ளார்கள். ஆனால் அவர்களில் அநேகமானோர், அல்லாவிடில் ஒரு பகுதியினராவது, 1980 ஆம் ஆண்டு காலங்களில் இந்திய தூதரத்துக்கு முன் 'எங்கள் தாயே' என்று கோஷமிட்டவர்கள், கொடி பிடித்தவர்கள்.

ஆனால், தமிழ் மக்கள் நடத்திய அரசியலில் நாட்டின் எல்லாப் பெரும்பான்மைக் கட்சிகள் இடையேயும் இனவாதத்தை அடிப்படையாக வைத்து அதிகாரத்தை கைப்பற்ற எத்தனித்த ஜே.வி.பி. இன்று இந்திய அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தமும், நல்லுறவும், பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படுத்துகின்றது.

கனடாவில் நிறுவப்பட்டிருக்கும் நினைவுச் சின்னம், தமிழ் மக்களது உணர்வுகளுக்குத் தீனி தந்தாலும், அது மாத்திரம் இன்றைய சர்வதேச அரசியல் பரப்பில் தமிழ் மக்களது அபிலாசைகளை எந்த அளவில் முன்னெடுக்கும் என்ற விரலுக்குத் தகுந்த வீக்கம் எனும் நிதர்சனத்தையும் கணக்கெடுத்தல் வேண்டும். சர்வதேசத்தின் அலகுகளில் கனடா தமிழ் மக்களது இனப் பிரச்சனைகளை வெளிக் கொண்டு வந்து ஆதரவு தேட உதவலாம். ஆனால், சர்வதேச அரங்கில் எந்த நாடும் இந்தியப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஆளுமையை மீறி, எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவதில்லை. இவற்றின் உணர்வுகள் தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை நட்புறவு நடவடிக்கைகளை இந்திய தரப்புகளோடு மேற்கொள்ள வைக்கிறது. தமிழ் தரப்புகளோ சம்பந்தனது தலைமைக் காலங்களில் இருந்தே இந்திய தூதரகத்தின் வாசலிலேயே நிற்கின்றன. ஒரு தடவை வெற்றிலை வைக்கப்பட்டு தரப்பட்ட அழைப்பையும் மாவை சேனாதிராசாவின் மகனின் திருமணம் என்றும், பின் சம்பந்தனது பாஸ்போர்ட்டைத் தேடிக் கொள்ள முடியவில்லை என்றும் தள்ளிப் போடப்பட்டது.

இந்தக் குளறுபடிகள் எல்லாம் எதனைக் குறிக்கின்றன? தமிழ் மக்களிடையே ஒரு திடமான அரசியல் அமைப்பு, அதற்கான பாதை இல்லை என்பதைத்தான்.

ஆணித்தரமற்ற புலம்பெயர் நடவடிக்கைகள் நாட்டில் உள்ளவற்றைப் பாதிக்கச் செய்யும். தெளிவான அரசியல் திசையில் நாட்டில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து பயணிக்குமானால் புலம்பெயர் அரசியல், நாடு கடந்த தமிழீழக் கருத்தியலில் இருந்து விடுபட்டு, சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் தந்து, நிலத்தில் உருவாகும் அரசியல் திசைக்கு ஆதரவு தரலாம் .

இந்த மையப்புள்ளியை ஏற்படுத்தக்கூடிய தலைமை உருவாக வேண்டும். உருவாக்க வேண்டிய கடமைப்பாடு தமிழ் மக்களுக்கு உண்டு.

1983இல் இலங்கை அரசியல் என்ற தனது நூலில் ரி.டி.எஸ்.ஏ.திஸநாயக்கா இவ்வாறு குறித்தார்:-

"சமஷ்டி என்பது சிங்கள மக்களால், வெறுக்கப்படும் ஒன்று. ஏனோ அவர்கள் தப்பிதமாகவோ, விளங்காத தன்மையிலோ அதனை ஒரு விதமான பிரிவினையாகவே பார்க்கிறார்கள். அப்படியான பெயரைக் கூறாத வழியில் பெல்ஜியம் நாட்டில் இது நடைமுறைப்படுத்தப்படக்கூடியதாக இருந்தது. ஒரு வருக்கொருவர் பிடித்துக் கொள்ளாத பிளமிஸ் (Flamish), ஒல்லாந்து நாட்டின் டச்சு மொழியை பேசும்

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

சந்ததியினர். அவர்கள் பெல்ஜியத்தின் வடக்கு பகுதியிலும், வலூன்ஸ் (Waloons) என்ற பிரான்ஸின் சந்ததியினர் தென்பகுதியிலும் வாழ்ந்து, அடிக்கடி போரில் ஈடுபட்டிருந்தனர். ஆயினும் இரண்டு பகுதியினரும் நாட்டின் தலைநகரான பிரஸல்ஸில் குடியிருந்து அவர்களுக்கு இடையே நட்பும் கலப்புத் திருமணங்களும் நடைபெற்றன. சமஷ்டி அமைப்பில், அது சிறிய நாடான சுவிட்ஸர்லாந்தோ, நடுத்தர நிலப்பரப்பு கொண்ட ஜேர்மனியோ அன்றில் பெரிய நாடுகளான அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகள் மாதிரியோ பாதுகாப்பு, நிதி, குடி வரவு போன்றவை மத்திய அரசுகளாலும், சுகாதாரம், கல்வி, பிரதேச வரிகள் போன்றவை சமஷ்டிக் கட்டமைப்புகளாலும் நிர்வகிக்கப்படுகின்ற. அதே மாதிரி இங்கும் (பெல்ஜியத்திலும்) நிர்வகிக்கப்படுகிறது. அதேசமயம் பிளமிஸ், வலூன் மக்கள் தங்களுக்கான அமைச்சர் குழுவையும் பெல்ஜியம் மந்திரி சபை யையும் கொண்டுள்ளனர். நிலைமை இலங்கையை போன்றதுதான். ஆனால் இலங்கையில் அது நடைமுறைப்படுத்தப்படக்கூடிய சாத்திய கூறுகள் இல்லை.


"ஏனெனில் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட்டு இருப்பதால். அந்த இணைப்பால் நாட்டின் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பும், மூன்றில் இரண்டு பங்கு கடற்பரப்பும், எட்டில் ஒரு பங்கு சனத்தொகை கொண்ட தமிழ் மக்களின் பிரதேசங்களுக்குள் வரு கின்றன. அடுத்து. விடுதலை புலிகள் பொதுவாகவும், பிரபாகரன் பிரத்தியேகமாகவும், கடைசி வரைக்கும் தங்களது ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை. விடுதலைப் புலிகளின் இராணுவ பலமே இன்றைக்கு தமிழ் மக்களது பலமான ஆயுதம். ஆகவே அவர்கள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டு வருவார்கள் என்பது, யாழ்ப்பாணத்தின் நிலப்பரப்பைக் கொண்ட குவைத் நாடு தனது ஒரே வருமான எண்ணை



குதங்களில் இருந்து எண்ணை பெற்றுக் கொள்வதை விட்டு விட வேண்டும் எனக் கூறுவதற்கு சமமானது.

"ஆகவே இருக்கின்ற ஒரே வழி விடுதலைப் புலி களை இராணுவப் பலத்தால் அழிப்பதுதான். ஆனால் அவர்களுக்கு இருக்கும் இராணுவ, புலம்பெயர் பலத்திலும் இது நடக்கக்கூடியது அல்ல. அதே

தொடர்ச்சி▼






ரி.டி.எஸ்.ஏ.திஸநாயக்காவும் அவர் எழுதிய நூலின் முகப்பும்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

சமயம் ஈழம் என்ற ஒன்று உருவாவதை சிங்கள மக்கள் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள். அதனை நடக்க விடவும் மாட்டார்கள். அதேசமயம் இந்தியாவும் ஏற்றுக் கொள்ளாது. இந்தியாவின் எந்த அரசும் தமிழீழம் என்பதை அங்கீகரிக்காது. ஏனெனில் அது படிப்படியாக தமிழ்நாடு பிரிவதற்கும் வழி வகுக்கலாம் என்பதால். யூகோஸ்லாவிய நாடுகள் பிரிந்தமையும் உதாரணங்களாக இருப்பதால், ஈழ பிரிவினை தமிழ்நாடு பிரிவினையை உருவாக்கும் என்பது வெறும் பேச்சல்ல.

“ஆகவே தற்பொழுது (1993) இலங்கையில் இனப் பிரச்சினையை தீர்ப்பது என்பது இரண்டும் கெட்டதான குழப்பமான நிலையில்தான் உள்ளது.”

பலராலும் இப்படியாக ஆராயப்பட்ட விடுதலைப் போராட்டம் பின் மஹிந்தவை ஜனாதிபதியாக்கும் திட்டங்களிலும் உள்கட்ட பிரிவினைகளாலும் திக்குத் தெரியாது மாறி, தடம் புரண்டு போனதில் புலம்பெயர் மக்களின் பங்கு காத்திரமானது.

ஆகவே இன்று அரசியல் சூழ்நிலை மாறியுள்ள நிலையில், தேசிய மக்கள் சக்தியுடன் முரண்படாது பேசித் தீர்க்கலாம் என்ற அபிப்பிராயத்தில் மக்களும் கணிசமான ஆதரவு தந்துள்ள நிலையில், புலம்பெயர் மக்களும் - முக்கியமாக நாடு கடந்த தமிழக அரசு கட்டமைப்புகள் போன்றவை - தங்களது அரசியல் இருப்புகளுக்காக இவற்றைக் குழப்பி. பேரினவாதிகளின் கைகளுக்கு விடுதலை புலிகளைத் தாரை வார்த்தமை போல இந்த சந்தர்ப்பத்தையும் ஆக்க வேண்டுமா என்ற ஆதங்கம் மக்களுக்கு உண்டு.

ஆகவே, தத்தமது இருப்புகளுக்காக நிலத்திலோ, புலத்திலோ அரசியல் செய்யாமல், ஒரு மையப் புள்ளியில் இருந்து அதனை நடத்தாமல், ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் தங்களைப் பிரபலப்படுத்தும் என்ற நோக்கில் நடை போடுவது, இடறி விழத்தான் வழி வகுக்கும். அப்படியானால், மக்கள் இவர்கள் பின்னால் போவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்று கருதி வேறு வழி இன்றி (by default ஆக) இயங்குகின்ற ஒரு சக்தியின் பின்னால் போகின்ற நிலையை அது ஏற்படுத்தும். அதுவே நிலைமையானால் அங்கு தெரிவுக்கு என்ன இடம் இருக்கிறது?

அந்தப் பரப்பில் கனடாவின் ஒற்றுமை பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட சிறப்புக் குழு ( the task force on Canadian unity) நாட்டிலிருந்த பிரஞ்சு மொழி பேசும் கனடா நாட்டவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் பற்றி ஆராயும் போது, (இது அவர்கள் கியூபக் மாகாணமாக உருவாகும் முன்) இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிகளும், பொருளாதார மாற்றங்களும், நிர்வாகங்களையும் அதிகாரங்களையும் ஒரு பொதுவான வாழ்வு முறையை நோக்கி மத்தியப்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது என்ற பொதுவான அபிப்பிராயத்தை கொண்டார்கள்.

ஆனால் இப்படியான மத்தியப்படுத்துவதற்கான முனைப்புகளும் பொதுவான வாழ்க்கை முறையும் அவற்றுக்கே உரித்தான விளைவுகளைத் தங்களது தனித்துவத்தைக் கோருவதிலும் தங்களது சுயாட்சியை பெற்றுக்கொள்வதற்குமாக தூண்டின. எப்படித் தாங்கள் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் ஈடுபாடுகளில் இருந்தாலும் எப்படி வேல்ஸ், ஸ்கொட்லாந்து, பிளமிஸ் மக்கள் தங்களது தனித்துவத்தையும் சுயாட்சியையும் பேணினார்களோ, அதே போல இந்த உலக அடங்கிய வடிவு பிரெஞ்சு மொழி பேசும் கனடியர்களையும் உந்துகிறது, ஆகவே அவர்களது தனித்துவமும் சுயாட்சியும் இன்றைய உலகத்தின் வளர்ச்சியில் யதார்த்தமானவை என ஏற்றுக்கொண்டது.

இதனைப் போல ஸ்பெயின் நாட்டில் உள்ள பாஸ்க், துருக்கியில் உள்ள குர்திஷ். சைப்ரஸில் உள்ள துருக்கி மக்களின் தனித்துவத்தையும் பார்க்கலாம்.

ஆனாலும் தங்களுக்கு உரித்தான மனோபாவங்களாலும் தாங்களே அறிந்து கொள்ளாத பயத்தினாலும் சிங்கள மக்கள் இதனைக் கண்டு கொள்வதில்லை. அதுதான் துரதிஷ்டமும் அனுபவமும். இன்றைய சூழ்நிலைகளில் தேசிய மக்கள் சக்தியுடன் இணக்கமான பேச்சுக்களின் இத்திசை நோக்கிப் போகக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அவர்களின் தலைவர்களோ அன்றி ஆதரவாளர்களோ கருத்தியல் தந்தால், தமிழ் மக்களின் எல்லா அரசியல் பரப்புகளையும் அந்த மையப் புள்ளிக்குக் கொண்டுவர தமிழ் மக்கள் கடமைப்பட்டவர்கள்.

(தொடரும்)

# யுத்தத்துக்கு மத்தியிலும் தளராத துணிச்சலுடன் செய்திப் பணியாற்றிய ஊடகவியலாளர் நடேசன்

## (அவரது 21ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று)



ஊடகவியலாளர் நடேசன் இன்று சுட்டுக் கொலை செய்யப்பட்டார்!

2004இல் ஒட்டுமொத்த சர்வதேசமும் இலங்கையின் பால் தமது பார்வையைச் செலுத்த செய்த செய்தியே இது.

ஆம் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 21ஆண்டு நினைவுதினம் இன்று. யாழ் ஊடக அமையம், கிழக்குமாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், தமிழ் ஊடகவியாலாளர் சமூகநலன் அறக்கட்டளை, அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக் களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்ஒன்றியம் ஆகியவற்றின் பங்களிப்போடு மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக, இன்று பிற்பகல் 3 மணியளவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

2004ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி, ஆயுதக் குழுவொன்றின் உறுப்பினர்களால், ஊடகவியலாளர் நடேசன் சுட்டுக்கொல்லப்பட்டார்

36 தமிழ் ஊடகவியலாளர்கள் இதுவரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தொ படுகொலைகள் தொடர் பாக நீதியான எந்த விசாரணையும் இடம்பெறவில்லை என்பது மிகவும் ஒரு கவலைக்கிடமான விடயம்.

கடந்த காலத்தில் ஊடகவியளார் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தி படுகொலை செய்தார்கள். தற்போது நல்லாட்சியில் ஊடகவியலாளர்கள் மீது வாளால் வெட்டிபடுகொலைசெய்யஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவே கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் மீது நடாத்தப்பட்ட வாள் வெட்டு பார்க்கப்படவேண்டும்.

இந்த நாட்டில் 1985 ம் ஆண்டு டிசம்பர் 25 ம் திகதி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றைச் சோர்ந்த க.தேவராசா என்ற வீரகேசரி ஊடகவியலாளர் படுகொ லையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஊடகப் படுகொலைகளில் 2009 ஆண்டு சசிமதன் வரை 45 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த காலப்பகுதியில் பல ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றன. பல ஊடகவியலாளர் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புக வேண்டி நேர்ந்தது.

ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை மேற் கொண்டு வந்ததுள்ள வரலாறு நீடிக்கின்றது. கடந்த நல்லாட்சி அரசாங்கம் படுகொலை செய்யப்பட் ஊடகவியலாளர் கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த போதும் அதுவும் இன ரீதியாக - பக்கச் சார்பாகவே - இடம் பெறுகின்றது.

மட்டக்களப்பில் 2004 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை செய்யப் பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் யாழ்ப் பாணத்தில் பிறந்திருந்தாலும் மட்டக்களப்பில் பல ஆண்டுகள் வாழ்ந்தவர். தமிழ் மக்கள் மீதும், அந்த மண் மீதும் அளப்பரிய பற்றுக்கொண்டிருந்தவர். அந்த மண்மீது கொண்ட பாசமே அவரை உண்மையின் குரலாக மாற்றியது. ஊடகங்களில் ஊடாக உலகிற்கு மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருந்தார்.

நீண்ட காலம் ஊடகப் பணி செய்து அனுபவம் பெற்றிருந்த இவர், ஊடகத்துறையில் முழு நேரமாகப் பணியாற்றாது விட்டாலும், ஒரு முழுநேர ஊடகவி யலாளன் ஆற்றும் பணிக்கு ஈடாக, அல்லது அதற்கு மேலாகவும் தனது ஊடப்பணியை அந்த கால கட்டத்தில் செவ்வனே புரிந்தவர்.

மட்டக்களப்பு மக்கள் மட்டுமன்றி, இன அழிப்பை அதிகம் எதிர்கொண்ட தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைகள் பற்றிய விவரங்களை விரல் நுனியில் வைத்திருந்த இவர், அந்த மக்கள் நினைவுகூரப்பட வேண்டும் என்பதிலும், அவை வரலாற்று பதிவாக இடம்பெறவேண்டும் என்பதிலும் அந்தப் படுகொலை பற்றிய விவரங்களை ஏனையவர்கள், குறிப்பாக இளையோர் அறிந்திருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டிருந்தவர்.



நடராஜன் ஹரன்

இனப் படுகொலைகள் மட்டுமன்றி மட்டக்களப்பு பற்றி எப்பொழுது எந்தத் தகவல் கேட்டாலும் உடனே சொல்லும் ஆற்றல் கொண்டிருந்த இவர், சொல்வதுடன் நிறுத்தி விடாது அவற்றை ஆராய்ந்து தகவல் திரட்டி எழுதித் தாம் பணியாற்றும் ஊடக மையங்களுக்கு தொலை நகலில் அனுப்பியும் வைப்பார்.

20 வருடங்களுக்கு மேலாக கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் செய்தியாளராகவும், 'நெல்லை நடே சன்' என்ற பெயரில் பத்தி எழுத்தாளராகவும் இருந்த இவர், ஐ.பி.சி வானொலி, சக்தி தொலைக்காட்சி உட்பட ஏனைய பல ஊடகங்களுக்கு தனது இறுதி மூச்சுவரை பணியாற்றியவர்.

ஏதாவது ஒரு முக்கிய விடயங்கள் பற்றி ஊடகங் கள் கேட்க மறந்து விட்டால் கூட அதனை ஞாபகம் ஊட்டி உடனே அனுப்பி வைப்பார். எதனையும் நேருக்கு நேர் பேசும் இவரது நடைமுறை காரணமாக, உண் மையை அல்லது மக்களிற்கு பாதகமான விடயங் களைக் ஆராயும் இவரது குணாம்சம் காரணமாக, பல தடவைகள் பல்வேறு எதிர்ப்புகளையும், இன்னல் களையும் எதிர்கொண்டவர்.

இவரது பணிக்கு சாகித்திய விருது, சிறந்த ஊடக வியலாளர் விருது (2000), ஆளுநர் விருது போன்ற பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டமை, அவரது ஊடகப் பணிக்கு கிடைத்த சான்றுகளாகும். இவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் கூட தனது தலை சிறந்த ஊடகப்பணிக்காக மதிப்பளிக்கப்பட்டவர்.

பல தடவைகள் நேரடியாகவும், தொலைபேசி ஊடகவும் கொலை மிரட்டல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த போதிலும், ஏன் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் (2000ஆம் ஆண்டு) இடம்பெற்ற போதிலும்கூட, அஞ்சாது தனது குடும்பத்துடன் இறுதிவரை மட்டு மண்ணில் இருந்து மக்களிற்காகக் குரல்கொடுத்த ஒரு சிறந்த ஊடக பணியாளார் என்பதற்கு அப்பால் ஊடக பற்றாளன் என்றே கூறவேண்டும்.

மட்டக்களப்பில் இலங்கை படையினரது கட்டுப் பாட்டில் இருந்த நகர் பிரதேசத்தல் வாழ்ந்த போதிலும், அன்று போர் இடம் பெற்ற பகுதியில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது பிரச்சினைகளையும், இன்னல்களையும் தென் தமிழ் ஊடகவியலாளர்களுடன் நேரடியாக அங்கு சென்று அங்குள்ள மக்களின் குரல்களை வெளிக்கொண்டு வந்து உலகிற்கு தமிழ் குரலாக தெரியப்படுத்தி பெரும் பங்காற்றியவர்.

பல இக்கட்டான காலங்களில்கூட இவர் போன்ற ஊடகவிலாளர்கள் மக்களிற்காகவும், அவர்களில் நல்வாழ்விற்காகவும், உரிமைகளுக்காகவும் ஆற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் யாரும் மறந்து விடக்கூடாது.

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், மாமனிதர் சிவராம், மயில்வாகனம் நிமலராஜன், லஸந்த விக்கிரமதுங்க என ரிச்சர்ட் டி சொய்சா , தமிழீழ தேசிய தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா முதல் இன்று வரை முப்பதுக்கும் மேற்பட்ட ஊடகர்கள் இதுவரை படுகொலை செயப்பட்டுள்ளனர்.

இவர்களைப் படுகொலை செய்தவர்கள் யார்? ஏன், அவர்கள் தண்டிக்கப்படவும் இல்லை, இழக்கப் பட்ட உயிர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவும் இல்லை? பாதிக்கப்பட்ட அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடுகள் கிடைத்தனவா? - போன்ற அடுக்கடுக்கான கேள்விகள் எழுத்த வண்ணமே உள்ளன

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் அவர்களின், ஊடகப் பணிக்கு அவரது இந்த நினைவு நாளில் நன்றி தெரிவிக்கும் அதேவேளை, அவரது இழப்பிற்கு நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்துவதுடன், ஊடகத்துறையில் உயிர் நீத்தோருக்கும் எமது இதய பூர்வ அஞ்சலியை காணிக்கையாக்குவோம்.....!.

# இன்றைய ராசி பலன்கள் - 31.05.2025




இன்று அதிக பயணங்கள் காணப படும். எந்த செயலையும் தொடங்கு வதற்கு முன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி காணலாம். கவனக் குறைவு கார ணமாக பணிகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

உறவில் இன்று புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இன்று மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைக்காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

மூட்டுக்களில் விறைப்பு அல்லது வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பயனுள்ள உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று சிறந்த வாய்ப்புகளை ஏற் படுத்திக் கொள்ள இயலும். எதிர்பாராத வகையில் கிடைக்கும் சொத்து உங்க ளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

கடின உழைப்பு வெற்றி பெற்றுத் தரும். உங்கள் முயற்சிக்கான பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் குடும்ப வட்டாரத்தில் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த திருப்தி கிடைக்கும்.

காப்பீடு மற்றும் பூர்வீகச் சொத்து வகையில் பண வரவுக்கு வாய்ப்புள்ளது. எனவே நிதி விஷயங்களை கவனமாக கட்டுப்பாட்டுடன் பராமரிப்பது நல்லது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் சுறுசுறுப்பாக செயல்களில் ஈடுபட்டிருப்பீர்கள். உங்களின் இனிமையான தகவல் தொடர்பின் மூலம் பலவற்றை சாதிப்பீர்கள்.

இன்று உங்கள் பணிகளை எளி தாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பணியின் இயல்பை விரிவுபடுத்தலாம்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். குடும்ப உறுபினர்களுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




புனித மற்றும் ஆன்மீக யாத்திரைக்கு இது உகந்த நாள். ஏழைகளுக்கு உணவு அளித்தல் மற்றும் தொண்டு நடவடிக் கைகள் மூலம் நன்மை பெறலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. பணி சம்பந்தமான முக்கிய செயல்களில் தாமதங்களை எதிர்கொள்ள நேரும்.

குடும்ப பெரியோர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை பராமரிக்க அமைதியை மேற்கொள்வது நல்லது.

பண வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள்வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவ து நன்மை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் சிறந்த பலன்களை காண இயலாது. உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அகந்தை ப் போக்கின் காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

பதற்றம் காரணமாக சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உடல் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு வெற்றி கிடைக் கும் நாள். புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை உருவாக்கிக்கொள்வீர்கள். இது உங்களுக்கு சிறந்த நாள்.

நீங்கள் உங்கள் பணிகளில் சிறப்பாக செயலாற்ற இயலும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அதிக பணிகள் காணப் படும். உங்கள் நேரம் மற்றும் ஆற் றலை நன்கு பயன்படுத்த திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணி களை சிறப்பாக ஆற்ற நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.

குடும்ப வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. குடும்ப உறுப்பினர்களிடையேகருத்து வேறுபாடு காணப்படும்.

காப்பீடு மற்றும் பூர்வீகச் சொத்து வகையில் பண வரவுக்கு வாய்ப்புள்ளது. எனவே நிதி விஷயங்களை கவனமாக கட்டுப்பாட்டுடன் பராமரிப்பது நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்குவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பலன்கள் இன்று உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். சுப காரியங்கள் தள்ளிப் போகும்.

புதிய வேலைக்கான வாய்ப்புகள் குறைவு. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

உங்கள் வார்த்தைகள் மற்றவரை காயப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர்களிடையே மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.05.2025




இன்றைய நாளை இசை கேட்பது, தொண்டு செய்வது, தன தருமங்கள் செய்வது போன்ற ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்துங்கள். இதனால் உங்களுக்கு மன ஆறுதல் மற்றும் மகிழ்ச்சி கிடைக்கும்.

பணியில் திருப்தி நிலை குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். தொழில் செய்பவர்கள் தங்கள் செயல்களில் தாமதங்களை உணர்வார்கள்.

உங்கள் தாயுடன் புரிந்துணர்வு கொள்வதில் சில பிரச்சினை காணப்படும்.. இதனை தீர்த்து நல்லுறவை ஏற்படுத்துங்கள்.

இன்று சிறப்பான நிதிநிலைக்கு ஏற்ற நாள் அல்ல. இன்று பண வரவு செலவு இரண்டும் காணப் பட்டாலும் செலவு அதிகமாக இருக்கும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். நீங்கள் பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. தொழில் செய்பவர்கள் மிதமான பலன்களை காண்பார்கள்.

கருத்து வேறுபாடு ஒன்றின் காரணமாக உங்கள் நெருங்கிய உறவுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று மிதமான பண வரவு காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் இன்று குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள் வலி மற்றும் சளி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் தவகல் தொடர்பு திறமை மூலம் சிறந்த பலன்களைக் காண லாம். உங்கள் திறமைகளை மேம் படுத்த இன்றைய நாளை பயன்ப டுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை நேர் மையாக மேற்கொள்வீர்கள். சக பணியாளர் களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் வார்த்தைகளை கவனமாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும்.

உங்கள் வீட்டு பெரியவர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்புள்ளது. உறவில் மகிழ்ச்சி யை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்வது சிறந்தது.

இன்று அதிக பணம் செலவு செய்ய நேரலாம்.




உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் சில விஷயங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். இதனால் உங்களின் பணிகளை முடிப்பதைக் கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள் ளும் போது கவனம் தேவை. பணியில் சிறப்பாக செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் குழந்தை முன்னேற்றம் குறித்த கவலை காணப்படும். குடும்ப உறுப் பினர்களுடன் அதிக நேரம் செலவு செய்வதால் அவர்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சி அடைவார்கள்.

இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவு குறிந்து காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

# மின்விநியோத்தடை ஏற்பட்டிருப்பின் உடனடியாக அறிவிப்பதற்கான வசதிகள்



பலத்த காற்று காரணமாக பல பகுதிகளில் மின்விநியோ யாகத் தடை நேற்று ஏற்பட்டுள் ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

மின்விநியோகத் தடையை வழமைக்கு கொண்டு வருவதற் காக சில குழுக்களை ஈடுபடுத் தியுள்ளதாக மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

ஏதேனும் பகுதிகளில் மின் விநியோகத் தடை ஏற்பட்டிருப் பின் CEB ASSIT எனும் செய லியூடாக உடனடியாக அறிவிப் பதற்கும் வசதிகள் ஏற்படுத் தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை



மேல், சப்ரகமுவ, மத்திய, வட மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென திணைக்களம் தெரிவித்தது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவு களிலும் வடக்கு, வடமத்திய வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மணித்தியாலத்திற்கு 30 – 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் எதிர்வுகூறியுள்ளது.